بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுஃல்லாஹுஃத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 10/02/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுஃமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் ஞானம் நிறைந்த வழிகாட்டல்களின் ஒளியில் திருக்குர்ஆனுடைய அருள்கள், அந்தஸ்து, தகுதி மற்றும் மகத்துவம் குறித்து எடுத்துரைத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவில் திருக்குர்ஆனின் மேன்மை, மற்றும் முக்கியத்துவம் தொடர்பான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுக்களை எடுத்துரைத்திருந்தேன். இன்று இது தொடர்பாக மேலும் சிலவற்றைக் கூறுவேன். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விக்டோரியா மகாராணியின் வைரவிழா சந்தர்ப்பத்தின் போது மகாராணிக்கு இஸ்லாத்தின் தூது செய்தியை விடுப்பதற்காக எழுதப்பட்ட தமது நூலான துஹ்ஃபயே கய்ஸரியாவில் திருக்குர்ஆனின் அருள்கள் மற்றும் முக்கியத்துவம் பற்றி இவ்வாறு கூறினார்கள்:**

“திருக்குர்ஆன் ஆழமான ஞானங்களால் நிறைந்துள்ளதாகும். மேலும் ஒவ்வொரு போதனையிலும் இன்ஜீலைக் காட்டிலும் உண்மையான நன்மை கற்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, உண்மையான மற்றும் மாற்றமில்லாத இறைவனைக் காண்பதற்கான ஒளி விளக்கு திருக்குர்ஆனின் கையிலேயே உள்ளது. ஒருவேளை அது உலகிற்கு வந்திருக்காவிட்டால், உலகில் படைப்பினங்களை வணங்குவதன் எண்ணிக்கை எந்த அளவுக்கு அதிகரித்திருக்கும் என்பதை இறைவனே அறிவான். பூமியில் தொலைந்து விட்டிருந்த இறைவனின் ஏகத்துவம் மீண்டும் நிலை பெற்று விட்டது. இது நன்றி செலுத்த வேண்டிய தருணமாகும்.”

இவ்வளவு தைரியத்துடன் அந்தக் காலத்தில் இந்தியாவின் மகாராணிக்கு இந்தத் தூதுச் செய்தியை எட்ட வைத்தவர் அல்லது இஸ்லாத்தின் தப்லீக் செய்தவர் வேறு யார் இருந்தார்? எவர்கள் இடத்தில் இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் மேன்மையை எடுத்துரைக்க தைரியம் இருக்கவில்லையோ, இன்று அம்மக்கள்தான் நவூதுபில்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அல்லது அஹ்மதிய்யா ஜமாஅத் திருக்குர்ஆனை ஏளனப்படுத்துகிறது என்று கூறுகிறார்கள்.

இத்தனைக்கும் முஸ்லிமல்லாத மக்களால் திருக்குர்ஆனின் மேன்மையை மறுக்க முடியாது தான். இருப்பினும், இவர்களுடைய செயல்பாடுகளைக் கண்டு இஸ்லாத்தின் எதிர்ப்பில் எந்த அளவுக்குக் குருடர்களாகி விட்டார்கள் என்றால், தங்களுடைய மன நிறைவுக்காக திருக்குர்ஆனின் பிரதிகளை எரித்து தங்களது உள்ளக் குமுறல்களை அமைதிப்படுத்துகிறார்கள். ஸ்வீடன் மற்றும் ஸ்கேண்டிநேவியன் நாடுகளில் இவ்வகையான சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன.

முஸ்லிம்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டால், திருக்குர்ஆனின் போதனைகளைப் புரிந்தவர்களாக அதன்படி செயல்பட்டால், முஸ்லிம் அல்லாதவர்களுக்கு ஒருபோதும் இவ்வாறு திருக்குர்ஆனை ஏளனப்படுத்த தைரியம் வராது. அல்லாஹுத்தஆலாவே இம்மக்களுக்கு அறிவை வழங்க வேண்டும்.

**தற்போது திருக்குர்ஆன் மட்டுமே நேர்வழிக்கான வழியாக இருக்கின்றது. இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''இஸ்லாம் எப்படிப்பட்டதோர் அருளுக்குரிய மற்றும் இறைவனைக் காட்டும் மார்க்கம் என்றால், எவரேனும் உண்மையான முறையில் இறைவனது தூய வேதமான திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைப் பேணி நடந்தால், அவர் இதே உலகில் இறைவனைக் கண்டு விடுவார். உலகின் பார்வைகளில் இருந்து ஆயிரக்கணக்கான திரைகளுக்கு அப்பால் இருக்கின்ற அந்த இறைவனைக் கண்டறிவதற்குத் திருக்குர்ஆனின் போதனைகளைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. திருக்குர்ஆன் அறிவுப்பூர்வமான வகையிலும் வானத்து அடையாளங்களின் வடிவிலும் மிகவும் எளிதான மற்றும் சுலபமான வழிமுறையில் இறைவனின் பால் வழிகாட்டுகின்றது.

அதில் ஒரு அருள் மற்றும் கவர்ந்திழுக்கும் ஆற்றல் உள்ளது. அது இறைவனைத் தேடுபவர்களை ஒவ்வொரு நொடிப்பொழுதும் இறைவன் பால் இழுக்கின்றது. மேலும், ஒளியையும் நிம்மதியையும் மன நிறைவையும் வழங்குகிறது. திருக்குர்ஆன் மீது உண்மையான நம்பிக்கை கொண்டுள்ளவர் தத்துவவாதிகளைப் போன்று இந்த நுட்ப மிக்க உலகைப் படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என்ற யூகத்தோடு மட்டும் இருந்திடவில்லை. அதற்கும் மேற்பட்டு அவர் ஒரு சுய தொலைநோக்குப் பார்வையைப் பெற்றவராக நம்பிக்கையின் கண்களால் உண்மையிலேயே அந்தப் படைத்தவன் இருக்கின்றான் என்பதைக் கண்டு கொள்கிறார்கள். மேலும், இந்தத் தூய வேதத்தின் ஒளியினைப் பெறுபவர் வறட்டு ஞானம் கொண்டவர்களைப் போன்று இறைவன் தனித்தவனும் இணையற்றவனும் ஆவான் என்று யூகம் கொள்வதில்லை. மாறாக, அவரது கையைப் பிடித்து இருளிலிருந்து வெளியேற்றுகின்ற நூற்றுக்கணக்கான ஒளிரும் அடையாளங்களுடன் உண்மையான முறையில், உண்மையிலேயே இருப்பிலும், பண்புகளிலும் இறைவனுக்கு எவ்வித இணையும் இல்லை என்பதைக் கண்டு கொள்கிறார். அத்தோடு மட்டுமின்றி, அவர் செயல் ரீதியாகவும், இறைவனை அவ்வாறே அவர் புரிந்து கொள்கிறார் என்பதை உலகிற்கு காண்பித்து விடுகின்றார். மேலும், இறைவனின் ஏகத்துவத்தின் மேன்மை எந்த அளவுக்கு அவரது உள்ளத்தில் உறைந்து விடுகின்றது என்றால், அவர் இறை நாட்டங்களுக்கு முன் உலகம் அனைத்தையும் ஒரு மரணித்த புழுவைப் போன்று, இன்னும் கூறுவதாயின், ஒன்றுமற்ற பொருளைப் போன்று முற்றிலும் இல்லாததாகக் கருதுகிறார்.''

பிறகு, **திருக்குர்ஆனில் அறிவு மற்றும் செயல் ரீதியான முழுமைப்பாட்டின்பால் உள்ள வழிகாட்டல் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

''திருக்குர்ஆனில் அறிவு மற்றும் செயல் ரீதியான முழுமைப்பாட்டின் வழிகாட்டல் இருக்கின்றது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். اِهۡدِنَا الصِّرَاطَ என்பதில் அறிவின் முழுமைத்துவம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது...... மேலும், செயல்

ரீதியான முழுமைத்துவம் صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ என்பதில் கூறப்பட்டுள்ளது. முழுமையானதும், நிரந்தரமானதும் ஆன விளைவுகள் கிடைத்து விட வேண்டும். செயல் முன்னேற்றத்திற்காக பரிசுகளைப் பெற்ற அந்த மக்களின் வழிகளில் செல்வதற்கான துஆ இருக்கின்றது. நபிமார்கள், ஸித்தீக்குகள், ஷஹீத்கள் மற்றும் ஸாலிஹீன்கள் ஆகியோர். மேலும், அவர்களுடைய உதாரணங்களும் இருக்கின்றன. மேலும், நேர்வழியைப் பெற்ற, எந்த மக்களுக்கு அல்லாஹ் பரிசுகளை வழங்கி இருக்கின்றானோ அப்படிப்பட்ட மக்கள் இக்காலகட்டத்திலும் இருக்கின்றார்கள்.

உதாரணமாக, நடப்பட்ட ஒரு செடி முழுவதுமாக வளர்ச்சி பெறாதவரை, அதில் பூவும், பழமும் தோன்ற முடியாது. அதேபோன்று ஒரு வழிகாட்டலின் மேன்மையான மற்றும் முழுமையான விளைவுகள் இருக்கவில்லை என்றால், அந்த வழிகாட்டல் மரணித்த வழிகாட்டல் ஆகும். திருக்குர்ஆன் எப்படிப்பட்ட ஒரு வழிகாட்டல் என்றால், அதன்படி செயல்படுபவர் உயர்தர மேன்மைகளைப் பெற்று விடுகிறார். மேலும், இறைவனுடன் ஓர் உண்மையான தொடர்பு அவருக்கு உருவாகிவிடுகின்றது. எதுவரை என்றால், அவரது நல்ல அமல்கள் ஒரு நல்ல மரத்தைப் போன்று வளர்ந்து கனியையும் மலரையும் தருகின்றன.

திருக்குர்ஆன் எப்படிப்பட்ட தூய வேதம் என்றால், அது பெரும் பெரும் குழப்பங்கள் பரவி இருந்த, பல்வேறு தீய கொள்கைகள் மற்றும் தீய செயல்பாடுகள் பரவி விட்டிருந்த காலத்தில் உலகில் வந்தது. இது தொடர்பாக அல்லாஹுத்தஆலா ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ அதாவது, வேதத்தை உடையவர்களாக இருக்கட்டும், பிறராக இருக்கட்டும்! அனைத்து மக்களும் தீய கொள்கையில் ஈடுபட்டிருந்தார்கள். மேலும், உலகில் மாபெரும் குழப்பம் நிலவி இருந்தது என்று சுட்டிக் காட்டியுள்ளான். எனவேதான், இறைவன் அனைத்துப் பொய்யான கொள்கைகளின் மறுப்பிற்காகவும் திருக்குர்ஆனைப் போன்றதொரு முழுமையான வேதத்தை நமது வழிகாட்டலுக்காக அனுப்பினான்.

குறிப்பாக, ஐவேளை தொழுகைகளில் ஒவ்வொரு ரக்அத்திலும் ஓதப்படுகின்ற சூரா ஃபாத்திஹாவில் அனைத்துக் கொள்கைகளைப் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ என்று கூறியுள்ளான். அதாவது, அனைத்து சிறப்புகளும் அகில உலகங்களையும் படைத்த இறைவனுக்கே உரித்தானவை ஆகும். الرَّحْمٰنُ அவன் எவ்வித (நற்) செயல்களும் இன்றி படைப்பவன் ஆவான். மேலும், எவ்வித (நற்) செயலும் இன்றி வழங்குபவன் ஆவான். الرَّحِيْم செய்கின்ற செயல்களுக்கான நற்கூலி வழங்குபவன் ஆவான். துஆக்கள் செய்தால் அவற்றை ஏற்றுக் கொள்பவன் ஆவான்.

அவன் مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ஆவான். வெகுமதி மற்றும் தண்டனை வழங்கப்படும் (தீர்ப்பு) நாளின் எஜமானன் ஆவான். மேலும், வெகுமதி மற்றும் தண்டனை இவ்வுலகிலும் உள்ளது; மறு உலகிலும் உள்ளது.

இந்த நான்கு பண்புகளில், உலகின் அனைத்துப் பிரிவுகளைப் பற்றிய குறிப்பும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மனிதன் கவனத்துடன் ஐவேளை தொழுகைகளில் இதனை ஓதினால் பெரும் இறைஞானத்தைப் பெற முடியும்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''திருக்குர்ஆன் ஓர் அற்புதமாகும். அற்புதம் எனப்படுவது யாதெனில், எதிர்ப்புறம் இருப்பவர் அதற்கு எதிராக ஓர் உதாரணத்தை எடுத்து வைக்க ஆற்றல் அற்றவராக இருக்கக்கூடிய, ஒரு வழக்கத்திற்கு மாறான செயல் ஆகும். திருக்குர்ஆன் எனும் அற்புதம் அரேபிய நாட்டின் அனைத்து மக்கள் முன்னும் வைக்கப்பட்டது. ஆனால், அரேபியாவின் அனைத்து மக்களும் அதுபோன்றதை எடுத்துரைக்க ஆற்றல் அற்றவராக இருந்தார்கள். எனவே, அற்புதங்களின் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்வதற்கு திருக்குர்ஆன் வசனங்கள் மிகவும் தெளிவான உதாரணமாகும். அதன் வார்த்தைகள் மிகவும் கருத்தாழமிக்கவையும் தெளிவானவையும் ஆகும்.

இது எப்படிப்பட்டதொரு மாபெரும் அற்புதம் என்றால், 1300 வருடங்கள் கழிந்த பிறகும் தற்போது வரை எவராலும் அதற்கு எதிராகப் போட்டியிட முடியவில்லை. மேலும், போட்டியிட எவருக்கும் ஆற்றலும் இல்லை. இது அற்புதமான முன்னறிவிப்புகளையும் கூட அற்புதமான வாசகங்களாக எடுத்துரைக்கிறது. எனவே, அற்புதங்களின் உண்மையான மற்றும் முக்கியமான நோக்கம் யாதெனில், உண்மை மற்றும் பொய்யில், அல்லது உண்மையாளர் மற்றும் பொய்யருக்கு இடையே உள்ள ஒரு வித்தியாசத்தைக் காண்பிப்பதாகும். மார்க்கத்தின் அசல் உண்மைத்துவம் இறை இருப்பை கண்டறிவதுடன் தொடர்புடையதாகும். உண்மையான மார்க்கத்துக்கு, அதில் இறை இருப்பை பறைசாற்றும் வலுவான, உறுதியான அடையாளங்கள் இருக்க வேண்டியது அவசியமாகும்.''

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''எந்த மார்க்கம் இறைவனைக் கண்டறிவதை விட்டு விடுகிறதோ அது ஒரு மரணித்த மார்க்கம் ஆகும். அதன் மூலம் எவராலும் தூய மாறுதலைப் பெற முடியாது.

பிறகு, இவ்வேதத்தில் எழுதப்பட்டுள்ள அறிவுப்பூர்வமான விஷயங்கள் உண்மையில், இறை அறிவிப்பே ஆகும் என்று யார் தீர்மானிக்க முடியும்? இறை இருப்பிற்கு அது எவ்வாறு ஆதாரத்தைக் கொடுக்க முடியும்? மேலும், உண்மையைத் தேடுகின்றவருடைய ஆன்மா, அந்த அறிவுப்பூர்வமான விஷயங்கள்தான் இறைவனை காட்டிக் கொடுக்கும் அடையாளங்களாகும் என்று எவ்வாறு முழுமையாக திருப்தி அடைய முடியும்? மேலும், அந்த விஷயங்கள் தவறுகளில் இருந்து முற்றிலும் தூய்மையானவை ஆகும் என்று எப்போது மன நிறைவு ஏற்பட முடியும்?

ஆக, ஒருவேளை மார்க்கம் சில விஷயங்களை மட்டுமே அறிவு அல்லது தத்துவத்தின்பால் தொடர்பு படுத்தி தனது உண்மைத்துவத்திற்குக் காரணமாக எடுத்துரைக்கின்றது; வானத்து அடையாளங்கள் மற்றும் வழக்கத்திற்கு மாறான செயல்களைக் காண்பிக்க தவறுகின்றது என்றால், அப்படிப்பட்ட மார்க்கத்தைப் பின்பற்றுபவர் ஏமாற்றத்தில் இருக்கின்றார். அவர் இருளில் மரணிப்பார். எப்போது வரை ஒரு மார்க்கம் இறை இருப்பை உறுதியான முறையில் நிரூபித்து காண்பிக்கும் பொறுப்பை ஏற்கவில்லையோ அப்போது வரை அந்த மார்க்கம் ஒன்றுமற்றதாக இருக்கின்றது.''

இந்த அந்தஸ்த்தைத் தான் நாம் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இறைவனை அடையாளங்களால், சொந்த தொடர்புகளால் கண்டறியுங்கள். பிறகு அல்லாஹுத்தஆலாவின் உண்மைத்துவம் மனிதனுக்குப் புலப்படுகின்றது. அல்லாஹுத்தஆலாவின் அருளால் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் எப்படிப்பட்ட உதாரணங்கள் இருக்கின்றனவென்றால், மார்க்கத்தைச் சாராத, இன்னும் கூறுவதாயின், மார்க்கமற்ற, இறைவனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும் இறை இருப்பின் நம்பிக்கை ஊட்டப்பட்டிருக்கின்றது. அறிவுப்பூர்வமான ஆதாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

அடையாளங்கள் காண்பிக்கப்பட்டு, சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்ட பிறகு, அவர்கள் மார்க்கத்தை ஏற்றுக் கொண்டதுடன் இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பெல்ஜியத்தின் ஒரு நாத்திக நண்பர் பைஅத் செய்தார். மேலும், 'நான் இறைவனின் இருப்பை ஏற்றுக் கொண்டதும், பிறகு எனக்கு அஹ்மதிய்யத் மற்றும் உண்மை இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. மேலும், இந்த வழியை எனக்கு அஹ்மதிய்யத் காண்பித்ததனால், நான் அஹ்மதி முஸ்லிமாக இருக்கின்றேன்' என்று அவர் கூறினார். நமது எதிரிகள் இந்த இறைஞானம் தொடர்பான விஷயங்களைக் கேட்பதற்கு விரும்புவதில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும். மேலும், அவர்கள் நம் மீது, நாம் திருக்குர்ஆனை மாற்றி விட்டோம் என்று ஆட்சேபனை செய்கிறார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "திருக்குர்ஆன் ஒவ்வொரு சம்பவத்தையும் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களுக்காகவும், இஸ்லாத்திற்காகவும் ஒரு முன்னறிவிப்பாக ஆக்கியுள்ளது. மேலும், இந்தக் சம்பவ வடிவிலான முன்னறிவிப்புகளும் மிகத் தெளிவான முறையில் நிறைவேறியுள்ளன. எனவே, திருக்குர்ஆன் இறைஞானம் மற்றும் உண்மைத்துவத்தின் ஓர் ஆறாகும். மேலும், முன்னறிவிப்புகளின் ஒரு கடல் ஆகும். எந்த ஒரு மனிதனும், திருக்குர்ஆன் இன்றி, இறைவன் மீது நம்பிக்கை கொள்வது சாத்தியமற்ற ஒன்றாகும். மேலும், குறிப்பாக திருக்குர்ஆனில் மட்டும் தான் இந்த சிறப்பு உள்ளது. அதாவது, இறைவன் மற்றும் மனிதனுக்கு இடையே உள்ள திரைகள் விலகி விடுகின்றன. திருக்குர்ஆனின் இரண்டு பகுதிகள் உள்ளன. ஒன்று சம்பவங்கள். இரண்டாவது கட்டளைகள். சில விஷயங்கள் சம்பவங்களின் வடிவிலும், சில கட்டளைகள் வழிகாட்டல்களின் வடிவிலும் உள்ளன. இதனை பிரித்து பார்க்காத மக்கள் திருக்குர்ஆனில் முரண்பாடுகளை நிரூபிக்க காரணமாக ஆகி விடுகின்றார்கள்."

இந்தக் கருத்து தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அன்னாருடைய மேற்கோள்கள் இன்னும் இருக்கின்றன. அவ்வப்போது நான் எடுத்துரைப்பேன். அல்லாஹுத்தஆலா நமக்குத் திருக்குர்ஆனின் போதனைகளின் படி சரியான முறையில் செயல்படுகின்ற நல் வாய்ப்பை வழங்குவானாக! ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰہِ نَحْمَدُہٗ وَنَسْتَعِیْنُہٗ وَنَسْتَغْفِرُہٗ وَنُؤْمِنُ بِہٖ وَنَتَوَکَّلُ عَلَیْہِ وَنَعُوْذُ بِاللّٰہِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَیِّئَاتِ اَعْمَالِنَا مَنْ یَّھْدِہِ اللّٰہُ فَلَا مُضِلَّ لَہٗ وَمَنْ یُّضْلِلْہُ

فَلَا ھَادِیَ لَہٗ وَنَشْھَدُ اَنْ لَّآ اِلٰہَ اِلَّا اللّٰہُ وَنَشْھَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُہٗ وَرَسُوْلُہٗ، عِبَادَ اللّٰہِ رَحِمَکُمُ اللّٰہُ اِنَّ اللّٰہَ یَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِیْتَآءِ ذِی الْقُرْبٰی وَیَنْھٰی عَنِ

الْفَحْشَآءِ وَالْمُنْکَرِ وَالْبَغْیِ یَعِظُکُمْ لَعَلَّکُمْ تَذَکَّرُوْنَ اُذْکُرُوا اللّٰہَ یَذْکُرْکُمْ وَادْعُوْہُ یَسْتَجِبْ لَکُمْ وَلَذِکْرُ اللّٰہِ اَکْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)